**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள் : 13.03.2026**

**வழக்கு எண் : MCOP. 4/2025**

**சாட்சி பெயர் : திருமதி. சொர்ணலதா /PW.1**

**2வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது இந்த மனுவை தாக்கல் செய்தோம். மனு நிலுவையின்போது என் தகப்பனார் இறந்துபோனார். என் தகப்பனார் நீரழிவு நோய் அதிகமாக இருந்தபடியால் இறந்துபோனார் என்றால் சரியல்ல, விபத்தின்காரணமாக இறந்துபோனார். என் தகப்பனாருக்கு விபத்தின்போது 65 வயது என்றால் சரியல்ல, 59 ஆகும். விபத்து பதிவேட்டில் 65 என வயது குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாழவல்லான் – ஆறுமுகமங்களம் ரோட்டில் விபத்து நடந்தது என்றால் சரிதான். எனது தகப்பனார் அவருக்கு சொந்தமான டிஎன் 69 ஏகே 0435 என்ற இருசக்கர வாகனத்தில் சென்றபோது விபத்து நடந்தது. என் தகப்பனார் மீது அவர் சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த வாகனம் மோதிவிட்டது. என் தகப்பனார் மேற்கிலிருந்து கிழக்குநோக்கி ரோட்டை கடக்கும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த வாகனத்தை கவனிக்காமல் ரோட்டை கடந்ததால் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல, பின்னால் வந்த வாகனம் மோதிவிட்டதால் விபத்து ஏற்பட்டது என என் தகப்பனார் சொன்னார். இந்த விபத்தில் என் தகப்பனால் பல்வேறு காயங்கள் ஏற்பட்டன. என் தகப்பனார் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 24.09.2019முதல் 11.10.2019 வரை சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான், அதன்பின்னிட்டு வீட்டுக்குவந்துவிட்டார். அதற்கு முன்பு அவருக்கு நீரழிவு நோய் இருந்தது என்றால் சரியல்ல, அவருக்கு நீரழிவு நோய்க்கு சரியான சிகிச்சை எடுக்காத காரணத்தினால் இறந்துபோனார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 07.05.2021ம் தேதி நீரழிவு நோய்க்கு சிகிச்சை எடுத்துகொண்டிருக்கும்போது இறந்துபோனார்

என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு இரத்த சுத்தகரிப்பு சிகிச்சை எடுத்துள்ளோம். சிறுநீரகம் அதிகப்படியாக பாதிக்குபொழுதுதான் இரத்த சுத்தகரிப்பு சிகிச்சை எடுக்கப்படும் என்றால் சரியல்ல. விபத்துக்கும், என் தகப்பனார் இறப்புக்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் விவசாய தொழில் பார்த்து மாதம் ரூ.20,000/- வருமானம் ஈட்டி வந்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கேட்டுள்ள தொகை அதிகப்படியானது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமல், வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி விபத்தை வரவழைத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, என் தகப்பனார்தான் உரிமையாளர். மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.03.13 14:50:50 +0530

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்**